கொடுக்கவேண்டும் என்பதில் இந்த அரசாங்கம் மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறது. நீண்டகாலமாகவே அது தள்ளிப்போடப்பட்டுவிட்ட காரணத்தினல்தான் தாமதமே தவிர, தாமதத்திற்கு இந்த அரசாங்கம் மட்டும் காரணமல்ல. இப்பொழுதுள்ள நிலைமையில் இது வெகு அவசரமாகக் கவனிக்கப்படவேண்டிய காரியமாக இருக்கிறது. எல்லோருக்கும் சௌகரியமான முறையில் முடியும்படி நம்முடைய முதல் அமைச்சர் அவர்களும், மற்றும் அமைச்சர்களும் திருவனந்தபுரத்தில் கேரள அரசாங்கத்தோடு இதுபற்றி விரைவில் பேச்சு வார்த்தை நடத்துவார்கள்.

3. நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

(ஆ) நீதிமன்ற விசாரணையிலுள்ள காரியத்தைப் பற்றி ஆய்வு செய்ய குழு அமைத்தல்.

*** திரு. ஏ. அ. சுப்பராஜா :** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், ஸார். நேற்றைய தினம் ஒரு கமிட்டி பாரம் பண்ணியதைப் பற்றி, கிரிமினல் ப்ரொஸீடிங்ஸ் இருக்கும் பொழுது அப்படி ஒரு கமிட்டி அமைத்தால் ஸப் ஜூடிஸ் ஆகாதா என்று பேரவைத் துணைத்தலைவர் அவர்களைக் கேட்டேன். இன்றைக்குத் தலைவர் அவர்கள் அது சம்பந்தமாகத் தீர்ப்புச் சொல்வார்கள் என்று சொன்னார்கள். இதுவரையிலும் ஒன்றும் சொல்லாததினல் தான், உங்களுடைய அபிப்பிராயத்தை, ரூலிங்கைக் கேட்பதற்கு பாயிண்டு ஆப் ஆர்டர் எழுப்பினேன்.

*** மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் இதைப் பற்றி அரசாங்கத்தின் சார்பாக நாங்கள் யோசித்துப்பார்த்தோம். அங்கே கிரிமினல் வழக்கு இருக்கிறது என்றால், காங்கிரஸ்காரர்கள் என்ற காரணத்திற்காக கிரிமினல் வழக்கு இல்லை. சில நபர்கள் மீது கிரிமினல் வழக்கு இருக்கிறது. அவர்களைப் பற்றிய வழக்கின் நியாயத்தைப் பாதிக்கக் கூடியது என்று சொன்னல் தான் அது ஸப் ஜூடிஸ் ஆகும். மாண்புமிகு நாகப்பட்டினம் உறுப்பினர் அவர்கள் சாட்டிய குற்றச்சாட்டு, பொதுவாக ஒரு கட்சியைப் பற்றிய குற்றச் சாட்டு. அது பொதுப்படைத் தன்மை படைத்ததாக இருப்பதால், ஸப் ஜூடிஸ் ஆகாது என்பது தான் அரசாங்கத்தின் கருத்து என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்காக ஒழுங்குப் பிரச்னை எழுப்பக் கூடாது. ஸப் ஜூடிஸ் பற்றித் தலைவர் தீர்ப்புச் சொல்வார் என்று துணைத் தலைவர் சொன்னார்கள் என்றால், தலைவர் சொல்லும்வரை காத்திருக்கவேண்டுமே ஒழிய, அதை ஒரு ஒழுங்கு பிரச்னையாக ஆக்கிவிட முடியாது. பேரவைத் தலைவர் அதைப் பற்றி முடிவு சொல்வார்கள் என்று துணைத் தலைவர் சொல்லியிருக்கிறார்கள் என்றால், பேரவைத் தலைவர் சொல்கிறாரா, இல்லையா என்று பார்த்துவிட்டு, அதன் பிறகு தான் ஒழுங்குப் பிரச்னை எழுப்பவேண்டும். இதில் எந்தவிதமான ஒழுங்குப் பிரச்னையுமில்லை. அதைப்பற்றி பேரவைத் தலைவர் ஆராய்ந்து முடிவு கூறுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

6. 1969–70ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 1—நிலவரித் துறை.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன் மொழிகிறேன்.

கோரிக்கை எண் 1—‘ நிலவரித் துறை” என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,77,36,700-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்.”